334241

No. of Printed Pages : 8

**6161**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language – Part I – TAMIL – Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் **38**-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

**1.** பண்புத்தொகை பயின்று வந்துள்ள சொல் _________.

(அ) அறிந்து (ஆ) நல்லொழுக்கம் (இ) சொலல்

**2.** இறந்தகால இடைநிலை அமைந்துள்ள சொல் _________.

(அ) படித்தான் (ஆ) படிப்பான் (இ) படிக்கின்றான்

[ திருப்புக

3. வேங்கை என்பது ________.
(அ) தனிமொழி (ஆ) தொடர்மொழி (இ) பொதுமொழி

4. ''இது செய்வாயா''? என்று வினவிய போது ''நீயே செய்'' என்பது ________.
(அ) மறைவிடை (ஆ) நேர்விடை (இ) ஏவல்விடை

5. 'செறுநரைக்' என்பதன் வாய்பாடு ________.
(அ) தேமா (ஆ) கூவிளம் (இ) கருவிளம்

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக :** **5x1=5**

6. படித்து தேறினாள் என்பது தெரிநிலை ________.

7. உவமை, உவமேயம் ஆகிய இரண்டனுக்கும் இடையில் உவமஉருபு மறைந்து வருவது ________.

8. ''எட்டுத்தொகை நூல்களுள் புறம்பற்றியன எவை?'' என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது ________.

9. ஆசிரியப்பாவின் ஓசை ________.

10. புகழ்வது போல பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் ________ அணி.

## பகுதி - 3

**சுருக்கமாக விடையளிக்கவும் :** **10x1=10**

11. ஓரெழுத்து ஒரு மொழியில் வல்லினம்மிகும், எடுத்துக்காட்டு தருக.

12. உருவகத்தை உவமையாக மாற்றுக - 'முகமதி'

13. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமைப் பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

14. கலைச்செல்வி கட்டுரை எழுதினாள். (செயப்பாட்டு வினையாக மாற்றுக.)

15. இரு பொருள் தருக - 'மாலை'

16. தொகைச் சொல்லை விரித்தெழுதுக - 'நாற்பொருள்'

17. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றை பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

18. பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அதிகாரியின் உத்தரவைக் கடைப்பிடிக்க வேண்டும்.

19. மரபுப் பிழை நீக்கி எழுதுக.
மாத்திரை சாப்பிட்டான்.

20. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
வேல்விழி திருக்குறள் படித்தாள்.

## பிரிவு - II
(மதிப்பெண்கள் : **10**)

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு** விடையளிக்க. **5x2=10**

21. ஐகாரகுறுக்கம் எவ்வெவ்விடங்களில் வரும் ?

22. இரட்டைக் கிளவியை சான்றுடன் விளக்குக.

23. வினைமுற்றைக் கொண்டு எவ்வெவ்வற்றை அறியலாம் ?

24. மறைவிடை, நேர்விடை சான்றுடன் விளக்குக.

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக. 'புரிந்த'

26. 'கருங்குயில்' - பிரித்து புணர்ச்சி விதி தருக.

27. முதற்பொருள் என்பது யாது ?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 50)

குறிப்பு : பகுதி **3** இல் வினா எண் **35** இல் காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டினுக்கு** விடையளிக்க. **2x5=10**

28. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது ?

29. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.
- பயின்றுள்ள அணியை விளக்குக.

**அல்லது**

பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க. **2x5=10**

31. தொல்லியல் துறை பற்றி எழுதுக.

32. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை விளக்குக.

33. குறிப்பு எழுதுக :
(அ) போக்குவரத்துச் சட்டங்கள்
(ஆ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள்

## பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

மகேஷ் வீட்டிற்குள் நுழைந்தவுடன், மம்மி, நாளைக்கு எங்க ஸ்கூல்ல ஸ்போர்ட்ஸ்டே. 'அதுல நான் புட்பால் மேட்ச்சில் பார்டிசிபேட் பண்ணப்போறேன். அதனால நான் வீட்டிற்கு வர லேட்டாகும்' என்று கூறினான்.

(ஆ) தொடர்களில் உள்ள எண்களைத் தமிழெண்களாக மாற்றுக.

51, 62, 78, 93.

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) The television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. Interesting dramas and films are shown at regular intervals. The television is also for commercial advertisements.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) East or West, home is the best.
(2) You must walk before run.
(3) No pain no gain.
(4) Prevention is better than cure.

35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

மணிமேகலை பள்ளிக்குச் செல்லும் வழியில் கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர் சாலை ஓரத்தில் அமர்ந்து கூடை முடைதலில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தாள். மூதாட்டியின் கைகள் இரண்டும் கூடை முடைதலில் விரைவாக சுழன்று கொண்டிருந்தது. இவரால் எப்படி இவ்வளவு விரைவாகச் செயல்பட முடிகிறது என மணிமேகலை வியப்படைந்தாள். ஒரு நாள் இரு கண்களையும் கட்டிக் கொண்டு மணிமேகலை வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின் மீது மோதிக் கொண்டாள். அப்போது தான் கண்ணொளி இழந்தவர்கள் பற்றி அவர்களது துன்பம் எத்தகையது என எண்ணிப் பார்த்தாள். அன்று முதல் மாற்றுத் திறனாளிகளிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

(1) மணிமேகலை பள்ளி செல்லும் வழியில் யாரைப் பார்த்தாள் ?
(2) மூதாட்டி என்ன செய்து கொண்டிருந்தார் ?
(3) மணிமேகலை எதனைக் கண்டு வியப்படைந்தாள் ?
(4) மணிமேகலை வீட்டில் என்ன செய்தாள் ?
(5) மாற்றுத் திறனாளிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என மணிமேகலை நினைத்தாள் ?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்க. 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

குமரன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். விடுமுறையில் அவன் வீட்டில் இருந்த பொழுது ஒரு நாள் அவனுடைய அம்மா பழங்கள் வாங்கி வருமாறு கடைக்குப் போகச் சொன்னார், அவன் கடைக்குச் செல்லும் வழியில்...

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் **எட்டு** வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

'குழந்தை' அல்லது 'நட்பு'

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் **ஐந்தினை** எடுத்து எழுதுக. 1x5=5

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்.

- பாவேந்தர் பாரதிதாசன்.

## பகுதி - 6

38. கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. 1x5=5

செல்வி என்பவள் வங்கி கணக்கில் ரூ. 10,000/- செலுத்துவதற்காக வங்கிக்கு சென்றாள். தேர்வர் தன்னை செல்வியாக பாவித்து விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து பூர்த்தி செய்க.

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5

இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் எல்லோரும் ''அவளுக்கென்ன கவலை? அவள் அம்மா ஓர் ஆசிரியர். அவளுக்கு பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்து விடுவார். எனவே அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை'' என்று கூறுவர். அதனைக் கேட்கும்போது இலக்கியாவிற்கு அம்மாவை நினைத்தால் பெருமையாக இருக்கும்.

பள்ளியில் ஆண்டு தேர்விற்குப் படிப்பதற்காக ஒரு வாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம் போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்து விட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணியாற்றும் ஆசிரியர் கூறினார்.

அம்மாவுக்கு ஏற்பட்ட நிலையைக் கேட்டு இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

(1) இலக்கியாவின் முன்னேற்றத்திற்கு யார் காரணம் ?

(2) இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள்?

(3) அம்மாவிற்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன ?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.

தேவி ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவாள். ஆனால், அவள் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவளைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார். தனிப்படிப்புச் சொல்லித் தருபவரின் பழகுந்தன்மை, அவளுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறாள் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறாள்.

(1) தேவி தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பாள் ?

(2) நீங்கள் தேவியாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

(அ) தந்தைக்குப் பயந்து அங்கேயே படிப்பேன்.

(ஆ) நீங்கள் செய்வது பிடிக்கவில்லை என்று நேரடியாகவே அவரிடம் கூறிவிட்டு, நடந்தவற்றை வீட்டிலும் சொல்லி விடுவேன்.

[ திருப்புக

## பிரிவு - IV
(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்க. **1x10=10**

(அ) காணாமல் போன மகிழுந்தினைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல் ஆணையருக்குப் புகார்க் கடிதம் ஒன்று எழுதுக.

**அல்லது**

(ஆ) தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க வேண்டித் தன் விவரப் பட்டியல் ஒன்று தயாரிக்க.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் எவையேனும் **ஒன்றினுக்குக்** குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு **ஒன்று** தருக. **1x10=10**

(அ) சிக்கனமும், சேமிப்பும் - சேமிப்பதன் அவசியம் - சேமிக்கும் வழிகள் - சேமிப்பதன் பயன் - இளமையிலேயே சேமிப்பைக் கற்றுக் கொள்ளுதல்.

**அல்லது**

(ஆ) எனது பிறப்பிடம் - கிளை நதிகள் - செல்லுமிடம் - எல்லாம் வளப்படுத்துதல் - அணைகள் - பயன்கள் - கலக்கும் இடம்.

-o0o-